

॥ जगद्गुरु श्रीमदादि शङ्करभगवत्पूज्यपादाः ॥

ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

2465

# ஆர்ய தர்மம்.

कैश्चित्स्वप्रतिभैकबद्धमतिभिः भिन्नोऽभयं यो भृशं
वेद श्रीगुरुशासनैस्सुखकरं तं धर्मसेतुं परम् ।
तन्वाना सुदृढं यथावदधुना या नन्दयत्यास्तिकान्
सेयं राजतु पत्रिकेति सुचिरं श्रीशङ्करं प्रार्थये ॥

தமக்குத் தோன்றுவதையே முக்கியப் பிரமாணமாகக் கொண்ட சிலர்களால் 'சாஸ்திரவிரோதமாக ஒரு காரியத்தை நாம் செய்தால், அதனால் அதிக பாபமேற்படுமே' என்கிற பயமில்லாமல், யாதொரு தர்மஸேதுவானது பலவாறாகப் பிளக்கப்பட்டிருக்கின்றதோ, மிகவும் சிறந்ததாயும், எவ்வித சுகங்களையும் கொடுக்கும் சக்திபெற்றதாயும் விளங்கும் அந்த தர்மஸேதுவை, எந்தப் பத்திரிகையானது அநாதிகளான வேதங்கள், ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் இவர்களுடைய ஆக்ஞானுஸாரமாய் முன்னிருந்தது போல், நன்கு உறுதியாகச்செய்து சகல ஆஸ்திகர்களுக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றதோ, அவ்வித மஹிமை பொருந்திய நமது ஆர்யதர்மம் என்ற இப்பத்திரிகையானது வெகுகாலம் இப்புவியில் பிரகாசித்துக்கொண்டிருக்கவேண்டும் என்று ஸ்ரீ சங்கரரான பகவானை அனுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

இக்காலம் நமது ஸநாதன தர்மநெறிகளைப் பலர் பலவாறாக மாற்றவேண்டுமென்று முயன்றாலும், அதற்கு அற்பமேனும் இடங்கொடாமல் ஸநாதன தர்மங்களைப் பாதுகாக்கவேண்டி, உலகில் விளங்கும் சுருதிகளுடைய கருத்தையும் கைலாஸத்திலிருந்தும் அவதரித்த பரமேசுவரரின் உருவாய்ப்பிரகாசிக்கும் ஸ்ரீ ஜகத்குரு மஹா ஸ்வாமிகளவர்களுடைய ஆக்ஞையையும் உறுதியான பிடிப்பாகக்கொண்டு அதற்கு மாறுதலின்றித் தர்ம தத்துவங்களை வெளியிட்டுச் சகல ஸாதுக்களுக்கும் அதிக ஆனந்தத்தை விளைவிக்கும் இப்பத்திரிகையானது, ஸ்ரீ பகவானுடைய கருணையால் நீடுழிகாலம் இம்மாநிலத்தில் விளங்கவேண்டி, கருணைக்கடலான ஸ்ரீ பரமேசுவரனை வேண்டுகிறேன். சுபம்.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

குரோதன-௵ தை-மீ ௧௨

## பதினோராவது ஆண்டு.

ஆஸ்திகர்காள், கும்பகோணம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய பரிபூரணமான அனுக்கிரகத்தால் நமது ஆர்யதர்மப் பத்திரிகைக்குப் பத்தாவது ஆண்டு பூர்த்தியாகி இன்று பதினோராவதாண்டு துவக்கமாயிற்று. சென்ற வருடத்தில், தீர்த்ததானம் சிறந்தது, ஆசாரம், ஹிந்து தேவஸ்தானமசோதா கண்டனம், பால்ய விவாஹம் சாஸ்திர சம்மதம்தான், சிதம்பரம் அத்வைத ஸபை, வேதாந்த ஸாரம், அகில இந்திய ஹிந்துமஹா ஸபா, ஸரஸ்வதி மாலா, ஸ்திரீ தர்மம், தீண்டாமை ஒழிப்பது சரியல்ல, ஸ்ரீ ஆசார்யவிஜயம், வர்ணாசிரம தர்மம், ஹிந்துமத தர்மம், ஹிந்துமதாபிமான சங்கம், இந்தியாவின் முன்னேற்றம், ஸம்ஸ்கிருத வித்யாப்பியாஸம், சங்கரஜயந்தி உத்ஸவம், சண்டாளஜாதி தத்வநிரூபணம், வேதாந்த பாடசாலை, ஸம்ஸ்காரம், ருத்திராக்ஷ மகிமை, ரஸமஞ்சரி, வேதங்கள் அபௌருஷேயமானவை, ஸ்ரீ ருத்திர மகிமை, நரகசதுர்த்தசி, மதாசார்யர்களும் அவர்கள் அருளியுள்ள பாஷ்யங்களும், யுக்திவாதம், பாஷ்யத்ரய ஸித்தாந்தம், விவேக ஸம்வர்த்தினி ஸபா, ஸ்ரீ ராகவன் தசரதருக்குச் செய்த உபதேசம், ஸ்ரீ காஞ்சியின் மகிமை, ஸஹபோஜன விசாரம், குருபக்தி, ஸம்ஸ்காரம், ஸீதா கல்யாணம் முதலான அரிய பல விஷயங்களை வெளியிட்டு அவைகளால் பகவத்பக்தியையும், பாபகர்மாக்களில் பயத்தையும், ஸநாதன தர்மானுஷ்டானத்தில் சிரத்தையையும் பூண்ட பெரியோர்களுக்கு மனமகிழ்ச்சியை நமது பத்திரிகை அளித்திருக்கும் என்பது பல நேயர்களாலும் அனுபவிக்கப்பட்ட விஷயமே.

இக்காலம் நமது தேசத்தில் ஸநாதன தர்மத்திற்கு நேர்ந்திருக்கும் கஷ்டதசையை நினைத்தால் எந்த ஆஸ்திகருக்குத்தான் மனவருத்தமுண்டாகாது. தர்மஸ்தாபன மசோதா ஏற்படவேண்டுமென்றும் விதவா விவாஹம் செய்யவேண்டுமென்றும், சிலரும் தீபாந்திரம் செல்லவேண்டுமென்று வேறு சிலரும், ருதுவான பிறகு விவாகம் செய்யவேண்டுமென்று ஒரு சார்பாரும், பலரும் சேர்ந்துண்ணவேண்டுமென்று ஒரு பகுதியாரும், தீண்டாமை விலக்கவேண்டுமென்று சிலரும், ஜாதிப்பிரிவே கூடாதென்று ஒரு கூட்டமும் இவ்வாறு அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் செய்யவேண்டுமென்றும், இவ்விதம் செய்தால்தான் நம் தேசம் முன்னேற்றமடைந்து க்ஷேமத்தைப்பெறுமென்றும், அரசாங்க ஸபைகளிலும் இந்த அபிப்பிராயங்களைப் பல மசோதாக்களாகக் கொண்டுபோய்ச் சிலவற்றைப் பாஸாகும்படிசெய்து மற்றுமுள்ளவைகளையும் அவ்விதமே செய்துவிடவேண்டுமென்றும் பல பிரஸங்கமேடையிலும், பத்திரிகைகளிலும் இந்துக்களில் ஆஸ்திக வம்சத்தில் ஜனித்த அறிஞர்களான அந்தணர்களும் பறையறைகிறார்கள். அந்தோ! மற்றும் சிலர் பண்டிதர்களென்கிற ஆவின் தோலைப் போர்த்துக்கொண்டு, சில ஸபைகளில் தம்மை அக்கிராஸனத்திற்கு அழைக்கவேண்டுமென்றும், லௌகிகத்திலிருக்கும் சிறந்த உத்தியோகஸ்தர்களுடைய ஸ்நேஹத்தைப் பெறவேண்டுமென்றும், எவ்விதத்திலாகிலும் தம்மைப் பிரஸித்திசெய்துகொள்ளவேண்டுமென்றும், மற்றும் பல காரணங்களை உத்தேசித்தும், தமது பிதா, ஆசார்யர் முதலான முன்னோர்களுடைய அனுஷ்டானங்களையும், சாஸ்திரங்களின் தத்துவங்களையும் சற்றும் கவனியாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இந்தப் பாழும் உடலை வளர்ப்பதே இம்மானிடப் பிறவிக்கு முக்கியமான பயனெனக்கருதி—ஐயோ! பாவம்—சாஸ்திரவிருத்தமாய் யார் எதை நடத்தினாலும் இதுவே சரி. இதற்குப் பிரமாணம் ருக்வேதத்திலிருக்கின்றதென்றும், யஜுர்வேத ஸம்ஹிதையிலிருக்கின்றதென்றும், ஸாமவேத உபநிஷத்திலிருக்கிறதென்றும் இவ்விதம் பலவிதமாக தப்பாகக்கூறிப் பிறரை வஞ்சிப்பது கொடிய பாவமென்று சற்றும் கருதாமல் அஞ்சாநெஞ்சுடன் தைரியமாய்

ஸபைகளில் கூச்சலிட்டு ஸாதுஜனங்களை மோசம்செய்து வஞ்சிக்கிருர்கள். கலி அரசனுக்கு அமைச்சனுயிருந்து வேலைசெய்யும் இப்போலிப்பண்டிதர்கள் சிரஞ்சீவிப் பட்டம்பெற்று இப்புவியில் தோன்றியிருக்கிருர்கள்? மாணத்தையடையப்போகிறதில்லையா? மரித்தபிறகு இக்கொடிய பாபத்திற்குத் தகுதியான சிக்ஷை செய்யவரும் இயமனையும் இவ்விதம் ஏமாற்றிவிடலாம் என்கிற தைரியம்கூட இவர்களுக்கிருக்குமென்று தெரிகின்றது. அவனை ஒருகாலும் ஏமாற்ற முடியாதென்கிற நிச்சயம் இவர்களுக்கு இருக்கவேண்டும். இவ்விதம் ஸநாதன தர்மத்தை மாற்றவேண்டி இவர்கள் படும் பிரயாசை போதாதெனக் கருதிப்போலும் வட தேசத்திலிருந்தும் சில வேஷதாரிகளும் இங்குவந்து தம்மை ஸ்ருஷ்டி கர்த்தாவாகக் கருதிச் சகல ஜாதிகளையும் பிரிவில்லாமல் ஒரே மேல்ஜாதியாகத் தமது சிறந்த உபதேசங்களினுல் செய்துவிடுகிருேமென்று பண்டிதர்கள் இல்லாதவிடத்தில் தாறுமாருய்ப் பேசிக் கீழ்ஜாதியிலுள்ளவர்களை வஞ்சித்துக் கெடுக்கிருர்கள். கீழ் ஜாதியிலுள்ள ஜனங்களும் ஸாதுக்களாகையால் இவர்களின் வேஷத்தைக்கண்டு பிரமித்து ஒன்றும் புரியாமல் மயங்கித்தம்மை இந்தச் சரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்கு நேராகப் போகும்படி செய்யப்போகிருர்கள் என்று நினைத்து அவர்கள் சொல்லுகிறபடி எல்லாம் ஆடிப் பலவிதங்களான தீச்செய்கைகளையும் தைரியமாய்ச்செய்து வீணில் கொடிய பாபத்திற்குள்ளாகிருர்கள்.

அந்தோ! கஷ்டம். இம்மாதிரி நமது ஸநாதன தர்மத்திற்கு நேர்ந்திருக்கும் அநேக அரிஷ்டங்களை விலக்கவேண்டி சாஸ்திரங்களையும் மஹான்களுடைய அநுஷ்டானங்களையும் முக்கிய ஆதாரமாகக்கொண்டு அவ்வக்காலங்களில் உண்மையான தர்மதத்வங்களை வெளியிட்டுவந்ததுபோலவே இனியும் நமது ஆர்யதர்மப் பத்திரிகையானது ஸ்ரீ ஜகத்குரு மஹா ஸ்வாமிகளவர்களுடைய அபிமான பலத்தால் லோகோபகாரத்தைக் கருதி நமது தர்ம ஸூக்ஷ்மங்களை வெளியிடுமாகையால், ஸநாதன தர்ம தத்வத்தையறிந்து அநுஷ்டித்து அதன்பயனைப் பெறவேண்டுமென்றும், தமக்கு வேண்டியவர்களிடமும் தெரிவித்து அவர்களையும் இப்

பத்திரிகையை வாங்கிப்படித்து அவ்விதமே அனுஷ்டானத்திலும் முடிந்தவரையில் அனுஷ்டித்து சிறந்த சிரேயஸ்ஸையடையும்படிசெய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் மிகுந்த பக்தி சிரத்தைபூண்ட ஆஸ்திகர்களனைவரையும் வேண்டிக்கொள்கிறோம். சுபம்.

உபபத்திராதிபர்.

---

## அவர்ண இந்துக்களைப் பிறமதம் புகாதவாறுசெய்ய.

தலைப்பில் காட்டிய தலையங்கத்துடன் 2-10-25 ல் சுதேசமித்திரனில் ஒரு சிறு வியாஸம் வெளியாயிருப்பதை அப்பத்திரிகாநேயர்கள் படித்திருக்கலாம். அதில் கேரளத்தில் ஸ்வாமி சிரத்தானந்தர் என்ற ஆர்யஸமாஜத்தார் செய்யப்போகும் வேலையைப்பற்றி எழுதியிருக்கிறது. ஸ்வாமி சிரத்தானந்தரென்பவர் ஆர்யஸமாஜத்தார் என்றும் ஆர்யஸமாஜக் கொள்கையென்பது நமது ப்ராசின வைதிக மதத்திற்கும் நமது மகரிஷிகளுடையவும் பரமாசார்யாளுடையவும் அபிப்பிராயங்களுக்கும் நேர் விரோதமென்பதையும் முன்னொருமுறை நமதுபத்திரிகையிலேயே விசேஷமாய் வரைந்துள்ளோமாதல்பற்றி மீண்டும் அதனை விரிப்பதிங் கழகல்ல. ஆதலின் பிரகிருதத்தைக் கவனிப்போம். இவர் டில்லியிலிருந்து மித்திரனுக்குத் தந்திமூலம் இவ்வாறு அறிவிக்கிறார்.

“தென்னிந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்டவகுப்பினர்கள் இனி ஹிந்துக்களால் ஏற்படும்கொடுமைமைச் சகித்திருக்க முடியாது. ஹிந்துக்களது தர்மத்தை அவர்ண ஹிந்துக்கள் விரும்புகின்றார்கள். அந்த தர்மத்திற்கு இச்சமயம் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது” என்று இன்னும் பலவிதமாகவும் அறிவித்திருக்கிறார். நாம் இங்குக் கவனிக்கவேண்டிய விஷயம் இது. ஸ்வாமி சிரத்தானந்தர் கூற்றில் அவர்ண ஹிந்துக்கள் என்று சிலரைக்குறிப்பிடுகின்றனர். அவர்களை ஹிந்துக்கள் கொடுமை செய்கின்றனராம். ஹிந்துக்கள் என்று ஸாமான்யமாய்க் குறிப்பிட்டதில் வர்ண

ஹிந்துக்கள் என்பது சிரத்தானந்தரின் அர்த்தம்போலும். இவர் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களான எல்லோரையும் ஒரு சார்பாகவும் அவர்களிலேயே சிலரை அவர்ண ஹிந்துக்களென்றும் அழைத்து ஸுரர்கள், அஸுரர்கள் என்பதுபோல் இரண்டு கக்ஷியைக்கிளப்பிவிட்டுச் சண்டைக்குத்தயார் செய்வதுபோல் இருக்கிறது. பத்திரிகைகளையே வேதமென்று கருதிப்படிக்கும் ஸாமான்யர்கள் இதனை உண்மையென்றெண்ணி ஹிந்துக்களிடத்தில் கோபத்தையும், சண்டையை ஸமாதானம் செய்யவந்திருப்பதாய்க் கூறும் சிரத்தானந்தரிடம் சிரத்தையையும் பாராட்டவாரம்பிக்கின்றனர். உண்மை இதல்ல. ஒடுக்கப்பட்ட ஜாதியென்றும், விலக்கப்பட்ட ஜாதியென்றும், பக்கத்தில் வாராமல் தடுக்கப்பட்ட ஜாதியென்றும் நமது ஐந்தாவது ஸகோதரனெனச் சாஸ்திரங்களாற் கூறப்படும் ஏழை ஸகோதரர்களை மூத்தவரிடத்தில் சண்டைசெய்து அனியாயமாய்த் தனக்குச் சேராத ஸொத்துக்குக்கூட வ்யாஜ்யம் போடும்படி தூண்டி விடுகிறவர் இவர். ஹிந்துக்களென்ற நாம் எல்லோரும் ஒரே பகவானின் பிள்ளைகள். நாமெல்லோரும் ஸகோதரர்கள். நாமெல்லோரும் வேததர்மங்களை அனுஷ்டிப்பதால் வைதிகர்கள்தான். ஆனால் நாம் என்றைக்கும் ஒத்து வர்ழவேண்டுமென்று கொண்டு நமது அகண்டவேதத்தில் இருக்கும் அத்புத ரத்னங்களை ஒருவாறுபகுத்து மூத்தவன் இதை அனுபவிக்கட்டும். அதற்கடுத்தவன் அனுபவிக்கவேண்டிய பொருள் இது. இது மூன்றும் ஸகோதரனது பாத்தியம். நான்காவது ஸகோதரன் இப்பொருளுக்குடையவன். ஐந்தாம் ஸகோதரன் இங்கனுபவிக்க வேண்டுமென்று எல்லைவரம்புகட்டி அளந்து வைத்த பொருளைத் தொன்று தொட்டனுபவித்துச் சண்டைச்சச்சரவில்லாமல் ஏககுடும்பம்போல் ஒத்துவாழ்ந்ததைக் கலி ஸகிக்கவில்லையோ? அல்லது தைவத்தின் திருஷ்டியே பட்டுவிட்டதோ ! இல்லையேல் நமது திருஷ்டியே நமக்கு விழுந்ததோ தெரியவில்லை. சிவ, சிவ, யாரிட்ட கொள்ளியானாலென்ன வீடு வேகிறது என்ற பழமொழிக்கிணங்க நமது மத ஒற்றுமை தளர்கிறது. ஸகோதரபாவம் விலகுகிறது. தர்மசாஸ்திரங்கள் பதுங்குகின்றன. வீணில் வளர்ப்பானேன். இன்னும் என்னென்ன கேடுகள்

வரக்காத்துக் கொண்டிருக்கின்றனவோ, இச்சமயத்தில் கேரள தேசத்தில்கொஞ்சகாலமாய் ஈழுவர்களெனப்படும் நமது ஐந்தாம் ஸகோதரர்கள் அண்ணன்களோடு சண்டைபோடும்படித் தூண்டி விடப்பட்டனர். அவர்களை அண்ணன் கொடுமை செய்கின்றானும் அந்தக் கொடுமையைச் சகியாது ஹிந்துவில்லாத சிரத்தானந்தர் சமாதானம்செய்ய வரப்போகின்றனராம். இதென்ன கொடுமை பாருங்கள். ஆரியர்களே, இங்குச்சிரத்தானந்தரை ஹிந்துவல்ல வென்று நான் சொல்வதாய் நினைக்கவேண்டாம். அவரது வசனத்திலேயே ஹிந்துக்களால் ஏற்படும் கொடுமையைச் சகித்திருக்க முடியாதென்றும், ஹிந்துக்களது தர்மத்தை அவர்கள் விரும்புகின்றனர் என்றும் சொல்லியிருப்பதில் திரிபுடிதோன்றுகிறது. ஹிந்துக்கள் அவர்ண ஹிந்துக்கள், தான்மத்தியஸ்தர். அவைகளிற் சம்பந்தப்படாதவர் என்று ஆதல்பற்றியே நானும் கூறினேனென்று கொள்க. உண்மையில் அவரும் ஹிந்துவென்றால் எனக்குப் பாரமல்ல. இப்போதும் இவர் சொல்லும் விஷயம் இது. அவர்ண ஹிந்துக்கள் ஹிந்துக்களால் துன்புறுத்தப்பெறுவதால் இச்சமயம் இவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்காக அநேக பாதிரிகளும், மகமதியர்களாக்குவதற்காக அநேக மகமதியர்களும் ஏராளமான பணச்செலவுடன் வீட்டுவாயிலில் காத்துக்கொண்டிருக்கின்றனராம். இச்சமயம் தான் அங்குப்போய் அவர்களைக் காப்பாற்றப் போகின்றனராம். இதுதான் இங்குக் கவனிக்கத் தக்கது. இவர் காப்பாற்றும் வழி என்ன? அண்ணன்களின் ஸொத்தைப் பிடுங்கிக்கொடுத்து விடுவதா? அப்படியானால் அது தவறு. நமது ஸொத்துக் கண்ணுக்கும், கைக்கும் அகப்படாதது. இல்லை. என்னிடமிருக்கிறது கொடுத்துவிடுவேன் என்றால்சந்திரனுக்காக அழும்பிள்ளையை உள்ளே இட்டுககொண்டுபோய் வெள்ளையான ரப்பர்ப் பந்தை எடுத்துக்கொடுத்து 'இது தான்சந்திரன்' என்று சொல்வதுபோலத்தானாகும். சிரத்தானந்தர் சொல்கிறபடி ஹிந்து தர்மத்திற்கு இச்சமயம் ஆபத்தேற்பட்டிருக்கிறதென்பது உண்மையிலும் உண்மையே. இவ்வாபத்து இலகுவானதல்ல. ஐயோ, இந்த தர்மசொத்துக்கு நான்தான் பாத்யஸ்தனென்று சொல்லும்புருஷனைக்காணோம். அதுபுதைத்து

வைத்திருக்கும் வீட்டிற் பிறந்த பிள்ளைகள் அதன் ஸ்வரூபம் இன்னதென்றுதெரிந்துகொள்ளவும் வழியில்லை. எடுத்துச் சொல் வாருமில்லை. இவ்வளவு சீர்கெட்ட நிலையில் சொந்தக்காரனும் காவற்காரனுமில்லாத திராக்ஷைப் பந்தலில் கழுதை வந்து வாய் வைத்ததுபோல் சிலர் சொந்தம் பாராட்டுகின்றனர். இருக் கட்டும். கழுதை பந்தல் முழுவதையும் பாழாக்குவதற்குள் சொந்தக்காரன் வந்துவிடுவான். இதுவும் இருக்கட்டும். பிரகி ருதத்தில் சிரத்தானந்தர் கூறுவது யாதெனில் 'இவ்விதம் கிறிஸ்த வர்களாகவும், மகமதியர்களாகவும் மாறுவதற்கு முன்னால் தாம் போய் நின்று அவர்களை ஹிந்துக்களாகவே இருக்கச்செய்யப் போகிறேன் என்பதுதான். இவ்விஷயத்தில் எந்த ஆஸ்திகன் தான் ஸந்தோஷப்படமாட்டான். ஆனால், அது தவறு. நான் முன்கூறியவாறு சிரத்தானந்தர் ஆர்யஸமாஜத்தாராகையால் அம் மதக்கொள்கையையே அவர் பாவச்செய்வாரேயொழிய நமதுபரம ஸநாதன வைதிக ஹிந்து மதத்தையல்ல. இதற்கும் அதற்கும் வெகு தூரம் வித்யாஸமுளதென்பதை மீண்டும் கூறுகிறேன். ஆகவே, இப்போது நமது ஏழைச் சகோதரர்களுக்குக் கிறிஸ்த வர்களாலும், மகமதியர்களாலும், ஆர்யஸமாஜத்தாராலும் திங்கு நேரிடுகிறதென்பது விளங்குகிறது. இக்காலத்தில் நாம் செய்ய வேண்டியவழி என்னவென்பதை நாம் யாரிடம் யோசிப்போம். ஏதோ சென்னையில் ஸமீபத்தில் அகிலபாரத வர்ஷீய பிராமண மகாசபையென்று ஒரு ஸபை ஏற்பட்டிருப்பதாய் அறிகிறேன். அச்சபையின் நோக்கம் யாதாயினும் அதோடு ஆங்காங்கு ஆஸ் திக பண்டிதர்கள் சென்று நமது ஸநாதன வர்ணாசிரமதர்ம தத் துவத்தை ஸமரஸமாய்ப் போதிக்குமாறு பண்டிதர்களுக்குஉதவி செய்வதென்பதையும் சேர்த்துக்கொண்டு அதற்காக நிதியும் சேர்த்துவைத்தால் இவ்விதம் கஷ்டம் நேரிடுமிடங்களில் பண்டி தர்களை அனுப்பி உண்மையான தர்மத்தை வாரிஇறைத்தால் முன் சொன்ன மூன்று ஆபத்துக்களிலிருந்தும் நம்முடைய ஸகோதரர்கள் தப்புவார்கள். ஸநாதன தர்மத்தையும் நாடுவார் கள். இவ்விதம் ஆகும்படியாய் ஈசன் ஒவ்வொரு ஆஸ்திகப் பிரபுவின் மனத்திலும் புகுந்தாலொழிய நமது மதம் எவ்விதமாகு

மோவென்பதை ஆலோசித்துப் பாருங்கள். ஆகவே, இவ்வள வால் நான் கேட்டுக் கொள்வதென்னவென்றால் ஸ்வாமி சிரத்தா னந்தர் செய்யப்போகும் தர்மத்திற்காகப் பண உதவி செய்வ தாய் நம்பி நம் ஆஸ்திகர்கள் பணத்தைக் கொடுத்துவிடாமல் வர் ணாசிரம தர்மஸபையை ஏற்படுத்தி அதில் முன் சொன்னவாறு செய்ய யாவரும் முன்வர வேண்டுமென்பதே. சுபம்!

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## கோனுபட்டு வேதபாராயண காலக்ஷேபம்.

———o———

இவ்வருஷம் கார்த்திகைமீ 1உ முதற்கொண்டு மார்கழிமீ 15உவரை இவ்வூர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேச்வராள் சந்நிதானத்தில் யஜுர்வேதக் கிரமபாராயணம் ஆத்மார்த்தமாக நடைபெற்றது. இதுவிஷயமாக ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் இவ்வூரில் விஜயம்செய்த காலத்து இக்கலியுகத்தின் கொடுமையையும் அதனின்றும் ஜனங் கள் க்ஷேமமடையும் வழியையும் மனதில்கருதி நமது மதத்திற் காதாரமாய் அனாதிகாலமாக விளங்கிவருகிற வேதத்தை அனு தினமும் பாராயணம் செய்யவேண்டியதவசியமென்றும் அதிலும் பலவிதபீடைகளுக்கு இடமான கார்த்திகை மார்கழி மாதங்களில் இப்பாராயணம் மிக்க அவசியமாகுமென்றும் ஆக்ஞாபித்தார்கள். ஷை ஆக்ஞையை சிரஸால் வஹித்து வேதியர்கள் அனைவரும் திரவ்யாபேக்ஷையன்னியில் கேவலம் ஆத்மலாபத்தையேகருதி பாராயணம் நடத்தினார்கள். ஷை 44 நாட்களிலும் பாராயணம் முடிவில் வேதியர்கள் கோஷ்டியாக ஆலயத்தை வலம்வருதலும் அஷ்டோத்திர அர்ச்சனையும் பால் நிவேதனமும் அதன் விநியோ கமும், முடிவுதினத்தில் மஹாந்யாஸபூர்வகமாக அபிஷேகமும் ஸஹஸ்ரநாமார்ச்சனையும் முத்கான்ன நிவேதனமும் பிராமண ஸந் தர்ப்பணையும் நன்று நடந்தேறியது. இவ்வனுஷ்டானம் சோழ

தேசங்களிலும், பாலக்காட்டில் அநேகம் கிராமங்களிலும் நடந்து வருகிறது. இது விஷயத்தில் சுருதி ஸ்மிருதிகள் பின்வருமாறு ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. உத்தராயணமும் தக்ஷிணாயநமும் தேவர்களுக்கு முறையே பகலுமிரவுமாகும். அப்பொழுது நமக்கோர் வருஷமானது அவர்களுக்கு ஓர் நாளாகும். தக்ஷிணாயநமென்ற ஆடிமுதல் மார்கழிமுடிய ஆறு மாதங்கள் இரவானால் கார்த்திகை மார்கழி மாதங்கள் இரவு மணி 3 முதல் 6 வரையிலாகும். இவ்விதம் விடியற்காலமான மார்கழிமாதத்தில் திருப்பள்ளி பூஜையென்று விளங்கும் தனுர்மாஸபூஜை சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. நாம் மார்கழிமீ 30உ லும் பூஜை செய்தால் 4 நிமிஷத்திற்கோர் தடவை பகவானை எழுப்பி எழுப்பி பூஜித்துப் பிரார்த்திப்பதாகும். இப்பூஜை விதித்த ஸ்மிருதியில் **वेदपारायणैः सह** என்று வேதபாராயணமும் செய்யவேணுமென்று வற்புறுத்தியிருக்கிறது. இக்காரியமானது பொதுஜன நன்மைக்கு ஈச்வர ஸேவை செய்வதுபோலாகுமென திண்ணமாய்க் கூறுவோம். ஏனென்றால், ஸ்மிருதியில் இந்த வசனமுள்ளவிடத்தில்,

**जनानां दोषशान्तये लोकसंहारशान्तये ।**

என்றும் காணப்படுகிறது. இதைநோக்க ஜனங்களுக்கும் பிராணிகளுக்கும் ஸம்பவிக்கும் பற்பல தோஷங்களை விலக்குவதற்காக நம்முன்னோர்களான மஹரிஷிகள் மறையின்பொருளை மனதில் வைத்து இச்சட்டம் ஏற்படுத்தினார்களென்று தெரியவில்லையா? இவைகளைநோக்க மஹரிஷிகளுக்குப் பொதுஜன விஷயத்தில் அபிமானமில்லையென்று கூறுவது நீதியாகுமா? இன்னும் பொதுஜன விஷயமாக மஹரிஷிகள் செய்திருக்கும் சௌகரியங்கள் நம்மால் முற்றிலும் சொல்ல இயலாது. ஆகையால்,

**कार्तिकस्यान्तिमो भागो मार्गशीर्षस्य चादिमः ।**
**यमस्य दंष्ट्रे द्वे प्रोक्ते तत्र जागृत मानवाः ॥**

என்று தேவிபாகவதத்தில் கூறியபடி கார்த்திகைமீ பிற்பாதியும் மார்கழிமீ முற்பாதியும் யமனுடைய இரண்டுதித்திப் பற்களானதால் மனிதர்களே, அதற்குள்ளகப்படாமல் ஜாக்ரதையாயிருக்க வேண்டியபடியால் முன்சொன்னபடி உஷஃகால பூஜையையும்

வேதபாராயணத்தையும் செய்து யமனை இடது காலாலுதைத்து மார்க்கண்டேயருக்கு அபயமளித்து மிருத்யும்ஜயனென்றுபெயர் வகித்த பரமனின் கருணைக்குப் பாத்திரமாகுவோமாக.

वेदघोषा विवर्धन्तां पापीयसि कलौ युगे ।
तेन तुष्टः प्रसन्नात्मा भूयाद्भूतिकरश्शिवः ॥

இங்ஙனம்,

K. A. கலியாணசுந்தர சாஸ்திரிகள்,
A. கைலாஸ கனபாடிகள்,
காரியதரிசிகள்.

---

உ
கடவுள் துணை.

[நமது நாட்டுப் பெரியோர்களின் சரித்திரங்களை வரலாற்று முறைப்படி "ஆர்யதர்மம்" இதழ்களில் சுருக்கமாக வெளியிட்டு வருவதும் ஒருவகையில் சிறுவர்கள் பக்தி முதலிய சிறந்த தருமங்களைத் தெரிந்துகொள்வதற்குத் துணையாகலாம் என்பது கருதி, ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களது உத்தரவைச் சிரமேற்கொண்டு ஒவ்வொரு வாரமும் சான்றோர்களின் சரித்திரம் சிறிது சிறிதாக வெளியிடப்படும். இந்த நன்னோக்கம் இனிதுநிறைவேறத் திருவருள் பாலிக்குமாறு ஆண்டவனைப் பன்முறையும் பணிவுடன் வேண்டுகின்றேன்.]

# திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் சைவசமயாசாரியர்களுள் ஒருவர். இவர் சீர்காழியிலே அந்தணர்குலத்திலே கௌணியர் கோத்திரத்திலே சிவபாதவிருதயரும் பகவதியாரும் செய்த தவத்தின் பயனாகத் தோன்றியவர். இவர் பாலப்பருவத்தில் பிள்ளையார் என அழைக்கப்பட்டார். இவருக்கு உரியகாலங்களில் மரபிற்கு உரிய சம்ஸ்காரங்கள் செய்விக்கப்பட்டன. பெற்றோர் பெருமகிழ்வுடன் இனிதுவளர்க்க வளர்வாராயினர்.

வளர்ந்துவர, பிள்ளையார் மூன்றுவது வயதிலே தமது தந்தையாருடன் அவ்வூர் ஆலயத்துள்இருக்கும் தீர்த்தத்தையடைந்தார். சிவபாதவிருதயர் பிள்ளையாரைக் கரையிலேஇருக்கச்செய்து ஸ்நானம் பண்ணலானார். அக்கால் பிள்ளையார் தந்தையாரைக் காணவில்லை. ஆலயத்தின் சிகரத்தைப்பார்த்து "அம்மே, அப்பா" என்று கூவி அழுதார். அழலும், தோணியப்பர் உமாதேவியாரோடும் இடபவாகனத்திலே தோன்றினார். உமாதேவியாரை நோக்கி "இக்குழந்தைக்குப் பாலை ஊட்டு" என்று அருளிச்செய்தார். உமையம்மையும் பொற்கிண்ணத்திலே பாலைக்கறந்து சிவ ஞானத்தைச் சேர்த்துப் பிள்ளையாருக்கு ஊட்டினர். அன்று முதல் பிள்ளையாருக்கு ஆளுடைய பிள்ளையார், திருஞானசம்பந்தர் என்ற பெயர்கள் உண்டாயின.

சின்னேரத்தில் நீரில் மூழ்கிய சிவபாதவிருதயர் கரைக்கு வந்தார்; பிள்ளையாரைக்கண்டார்; "நீ யார்தந்த பாலை உண்டாய்" எனக் கடிந்து உரைத்தார். உரைத்தலும், சம்பந்தர் உமாதேவியாருடன் இடபாரூடராகி நின்ற தோணியப்பரைச் சுட்டிக்காட்டித் "தோடுடைய செவியன்" என்ற தொடக்கத்தினையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார். தோணியப்பர் மறைந்தார். சம்பந்தரும் ஆலயத்துட் சென்றனர். சிவபாதவிருதயரும் தமது குமாரரைப் பின்தொடர்ந்தார்; பேரானந்தங்கொண்டார். ஊராரும் இந்த அற்புதத் திருவிளையாடலைக் கேள்வியுற்றனர்; ஆலய வாயிலைவந்து கூடினர்; சம்பந்தரை வணங்கினர். வேதங்கள் ஒலிக்க மங்கலவாத்தியங்கள் முழங்கச் சிவபாத விருதயரது தோளின்மேல் ஏறிக்கொண்டு சம்பந்தர் தமது திருமாளிகைக்குச் சென்றார்.

மற்றைநாள் திருக்கோலக்காவுக்குச் சென்றார்; கோயிலை வலஞ்செய்து உள்ளேசென்று வணங்கினார்; ஒத்தறுத்துத் திருப்பதிகத்தைப் பாடத்தொடங்கினார். சிவபிரானது திருவருளால் ஸ்ரீ பஞ்சாட்சரம் எழுதப்பெற்ற பொற்றாளம் சம்பந்தரது கையிலே வந்தது. பின்னர்ச் சீர்காழி, தமது தாயார் பிறந்த திருநனிபள்ளி முதலிய தலங்களுக்குச் சென்றார். ஆங்காங்குத் திருப்பதிகங்களைப் பாடியருளினார்.

இங்ஙனமாகத் திருநீலகண்டப் பெரும்பாணர் சம்பந்தரை வணங்கும்பொருட்டு விறலியாரோடும் சீர்காழியைச் சேர்ந்தார்; சம்பந்தரோடும் பாணியை விறலியோடும்பாடி யாழினை வாசித்தார்; சம்பந்தருடைய விருந்தினராக இருந்தார். அன்றுமுதல் சம்பந்தருடனேயே சென்று அவர்பாடும் பதிகங்களை யாழில் வாசிப்பாராயினர். இம்முறையில் பிள்ளையார் சிதம்பரம், திருநீலகண்டப் பெரும்பாணர் பிறந்த திருவெருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களுக்குச் சென்றார்; திருநெல்வாயில் அரத்துறைக்குப் போக விரும்பினர்; தந்தையாரது தோளிலிருந்து இறங்கிநடந்து செல்லலானர்; கால்கள்நோவ, மாறன்பாடியை அடைந்தார்; சூரியன் அஸ்தமயமானமையின் அன்றிரவு அப்பதியிலே தங்கினர்.

இரவிலே திருவாத்துறைச்சிவனர் அவ்வூர் அந்தணர்களது கனவிலேதோன்றி "ஞானசம்பந்தன் நம்மிடத்திற்கு வருகிறான். நீங்கள் நம்மிடமிருந்து முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் என்றவற்றை எடுத்துக்கொண்டு போங்கள்" எனக் கூறி மறைந்தார். அங்ஙனமே சம்பந்தரது கனவிலும்தோன்றி "நாம் உனக்கு முத்துச்சிவிகை முதலியவற்றை அனுப்புகின்றோம்; நீ ஏற்றுக்கொள்" என்றும்கூறி அருளினர். அரத்துறை அந்தணர்களும் அவற்றோடு எதிர்சென்று சம்பந்தரைச் சிவிகையிலே ஏறியருளுமாறு வேண்டினர். சம்பந்தர் "எந்தையீசன் எம்பெருமான்" என்னும் திருப்பதிகத்தைப்பாடிச் சிவிகையிலே ஏறியருளினர். திருவாத்துறைக்குச்சென்று வணங்கினர்; வேறு பல தலங்களுக்குச் சென்று சீர்காழிக்கு வந்தார். உபநயனஞ்செய்விக்கப் பெற்றார்; "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்ற திருப்பதிகத்தால் "பஞ்சாட்சரம் சகல மந்திரங்களுக்கும் வித்து" என்பதை விளக்கினர்; தோணியப்பரை வணங்கிக்கொண்டு அங்கேயே தங்கியிருந்தார்.

இந்நாளிலே திருநாவுக்கரசர் சம்பந்தரைப்பார்க்க எழுந்தருளினர். இருவரும் சிலநாட்கள் சீர்காழியிலிருந்து பின்னர்ப் பல தலங்களுக்கும் சென்றனர். மழநாட்டிலுள்ள திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைய, அந்நகர்க் கொல்லிமழவன் பிள்ளையாரைப் பெரிதும் போற்றிவணங்கினன். பிள்ளையார் ஆலயத்திற்குச்சென்

ரூர். அங்கே "துணிவளர் திங்கள்" என்ற திருப்பதிகத்தைப்பாடி அந்த மழவன் மகளது முயலகன் என்னும் நோயை நீக்கினார். வேறு பல தலங்களையும் வணங்கிக் கொங்கநாட்டிலுள்ள திருக் கொடிமாடச் செங்குன்றூரில் இருக்குங்கால், உடன்வந்த அடி யார்கள் குளிர்சுரத்தால் வருந்தலானார்கள். பிள்ளையார் "அவ் வினைக்கிவ்வினை" என்னும் திருப்பதிகத்தைப்பாடி அந்த நோயை அந்த நாட்டைவிட்டே ஓட்டினார்.

சிலநாள் அங்கே இருந்து சோழநாட்டை அடைந்தார். திருச்சத்திமுற்றத்திற்குவந்து திருப்பட்டீச்சரத்துக்குப் போகப் புறப்பட்டார். பட்டீசர் அருள்புரிந்து அனுப்பிய முத்துப்பந்தர் நிழலைச்செய்ய, ஆலயத்திற்குச் சென்று வணங்கினார்; திருவாவடு துறைக்குவந்தார். "இடரினுந்தளரினும்" என்னும் திருப்பதிகத் தைப்பாடிப் பொற்கிழி ஒன்றைப்பெற்றுத் தந்தையாருக்கு வேள் வியைச் செய்வதற்கு உதவினார். சாத்தமங்கை, செங்காட்டங்குடி முதலிய இடங்களில் நீலநக்கர், சிறுத்தொண்டர் இவர்களால் உபசாரம் பண்ணப்பெற்றார்; திருமருகலுக்குச்சென்றார்; அங்கே அரவுகடித்து இறந்த வணிகனைச் "சடையாயெனுமால்" என்னும் திருப்பதிகத்தைப்பாடி உயிர்ப்பித்தார்; திருப்புகலூரில் முருகனா ருடன் எழுந்தருளியிருந்தார்; திருநாவுக்கரசருடன் திருவீழி மிழலையிலே தங்கிச் சிவபிரான் திருவருளால் படிக்காசுபெற்றுப் பஞ்சத்தைத்தீர்த்தார்; தாம்பெற்ற காசு வட்டம்கொடுத்து மாற்ற வேண்டியதாயிருந்தமையின் "வாசிதீரவே" என்ற திருப்பதிகத் தைப்பாடி நற்காசினைப்பெற்றார்; திருமறைக்காட்டிற்குச்சென்று திருநாவுக்கரசர் பதிகம்பாடித்திறந்த கதவைச் "சதுரம் மறை" என்றுபாடி அடைக்கச்செய்தார்; அங்கேயே தங்கியிருந்தார்.

இந்நிலையில், பாண்டிநாட்டிலே சைவப்பற்றுக் குறைந்து வருகின்றமையை உணர்ந்த மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவர்களது வேண்டுகோளால் அந்த நாட்டிற்குச் செல்லலுற்றார். "வேயுறு தோளி பங்கன்" என்ற திருப்பதிகத்தைப்பாடி அப்ப ரிடம் விடைபெற்றார்; பல தலங்களையும் வணங்கிப் பாண்டி நாட்டை அடைந்தார்; மதுரையம்பதியைக் குறுகினார்; பாண்டி மாதேவியார், குலச்சிறையார் என்ற இருவராலும் வணங்கப்பட்

டார்; ஆலயத்திற்குச்சென்று "மங்கையர்க்கரசி" என்று தொடங்கிப்பாடினர்; அங்கேயே தங்கலுற்றார். அக்கால், சமணர்கள் அரசனது சம்மதத்தைப்பெற்றுச் சம்பந்தர் எழுந்தருளியிருக்கும் திருமடத்திலே தீயைப்பற்றவைத்தார்கள். அடியார்களால் அச்செய்தியை உணர்ந்த சம்பந்தர் "செய்யனே திருவாலவாய்" என்ற திருப்பதிகத்தைப்பாடி அந்த "அமணர்கொளுஞ்சுடர்—பையவேசென்று பாண்டியற்காகவே" என்று முடித்தார். அத்தீ அணைந்து பாண்டியனை வெப்புநோயாக அடைந்தது. சமணர்கள் என்னசெய்தும் அந்த வெப்புநோய் நீங்கினபாடில்லை. பின்னர், அரசனது உடன்பாட்டின்மேல் பிள்ளையாரை அழைத்துவந்தனர். சமணர்கள் அரசனது இடதுபக்கத்து நோவைத் தீர்ப்பதாகக் கூறினர்கள், சம்பந்தர் வலப்பக்கத்து நோயைப்போக்க எண்ணி "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி விபூதியைத்தடவினர். நோய் நீங்கியது. சமணர்களது பக்கம் நீங்கினபாடில்லை. பாண்டியனது வேண்டுகோளால் சம்பந்தர் அந்த இடப்பாகத்து நோயையும் போக்கியருளினர். பின்னர்ச் சமணர்கள் சம்பந்தரை வாதுக்கழைத்தனர். 'அவரவர் தத்தம் சமயக்கருத்தை எழுதி அந்த ஏட்டைத் தீயிலேஇட எந்தஏடு வேகாமல் இருக்கிறதோ, அந்த சமயமே உண்மைச் சமயம்' என்று கூறலாயினர். சம்பந்தர் "போகமார்த்த" என்ற திருநள்ளாற்றுப் பதிகமிருந்த ஏட்டைத் "தளிரிலவளரொளி" என்ற பதிகத்தைப்பாடித் தீயிலிட்டனர். அந்த ஏடு பசுமையாய் விளங்கிற்று. சமணர்கள் இட்ட ஏடு சாம்பராயது. 'மீட்டும் ஓர் ஏட்டை வைகையாற்றில் இடுவோம். எந்தஏடு எதிர்த்துக் கரையில் ஏறுகின்றதோ அந்தச்சமயமே உண்மைச்சமயம். தோற்றவர்களை அரசர் கழுவில் ஏற்றக்கடவர்' என்று கூறிக்கொண்டனர். அங்ஙனமே சமணர்கள் தங்களது ஏட்டை வைகையில் இட்டனர். அது காணாதுபோயிற்று. சம்பந்தர் "வாழ்கவந்தணர்" என்ற பாசுரத்தை ஏட்டிலே எழுதி வைகையில் இட்டனர். ஏடு எதிரே சென்றது. "வன்னியமத்தமும்" என்னும் திருப்பதிகத்தைப்பாட ஏடு தங்கியது. பலரும் மகிழ்ந்தனர். அரசனது கூனும் நீங்கியது. சில நாட்கள் அங்கேயிருந்து பின்னர்ச் சோழநாட்டை அடைந்

தார். திருக்கொள்ளம்பூதூரை அடைந்து "கொட்டமேகமழும்" என்ற பதிகத்தைப்பாடி ஓடத்தைச் செலுத்தினார். போதிமங்கைப் புத்தநந்தியை வாதில் வென்றார். திருப்பூந்துருத்தியை அடைந்து திருநாவுக்கரசரை வணங்கிப் பாண்டிநாட்டின் பெருமையை உரைத்தார். தொண்டைநாட்டை அடைந்து பலதலங்களை வணங்கினார். திருவோத்தூரில் "பூத்தேர்ந்தாயன" என்ற திருப்பதிகத்தைப்பாடிக் "குரும்பையாண்பனை யீன்குலையோத்தூர்" என்று திருக்கடைக்காப்பாலேபாடி ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினர். காளத்தி முதலிய பல தலங்களையும் வணங்கி ஒற்றியூரை அடைந்தார். மயிலாப்பூர்ச் சிவனேசச் செட்டியார் புத்திரியாகிய பூம்பாவையின் எலும்பு அடைபட்டிருந்த குடத்தைக்கண்டு "மட்டிட்ட புன்னை" என்ற திருப்பதிகத்தைப்பாடிப் பூம்பாவைப் பிழைக்கச் செய்தார்; சீர்காழிக்குவந்தார்.

அக்கால், சிவபாதவிருதயர் முதலாயினார் சம்பந்தருக்குத் திருமணம் செய்விக்க எண்ணினார். பிள்ளையாரின் அனுமதியைப் பெற்றுத் திருநல்லூர் நம்பாண்டார் நம்பியார் புத்திரியை விவாகம் பண்ணிக்கொள்வதாக நிச்சயம் செய்தனர். உரியகாலத்தில் திருமணமண்டபத்திற்சென்று இரத்தினாசனத்தில் அமர்ந்தனர். வேதவிதிப்படி சடங்குகள் நிறைவேற அக்கினியை வலஞ்செய்து திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற்குச் சென்றார். "தேவரீருடைய திருவடிகளையும் அடையும் பதம் இது" என்று கூறிக் "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். கடவுள் சோதிவடிவமாக விளங்கினார். "காதலாகிக்கசிந்து" என்னும் நவச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். திருமணத்திற்கு வந்திருந்த அனைவருடனும் திருஞானசம்பந்தர் ஜோதியுட்கலந்தருளினார். இவர்பாடிய திருப்பதிகங்கள் 16,000 என்ப. கிடைத்தன 384.

தண்டமிழ்த் தொண்டன்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.